பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்.675 **நாள்: 13.11.2026**

தேசியத் தூய்மைப் பணியாளர்கள் ஆணையத்தின் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரம் சிங் கர்மா அவர்கள், தலைமையில் சென்னையில் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்ட நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு கூட்டம் 12.11.2026 அன்று நடைபெற்றது.

இந்திய அரசின் தேசியத் தூய்மைப் பணியாளர்கள் ஆணையத்தின் (NCSK- National Commission for Safai Karamcharis) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரம் சிங் கர்மா அவர்கள் தலைமையில், சென்னை, புதிய அரசு விருந்தினர் மாளிகையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட நடவடிக்கைகள், சலுகைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் 12.11.2026 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன்,இ.ஆ.ப., மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஒப்பந்ததாரரிடம் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களிடம் கலந்துரையாடி, அவர்களது கருத்துக்கள் கேட்கப்பட்டது. தூய்மைப் பணியாளர்கள் தங்கள் பணியின்போது கையுறை, காலணி, முகக்கவசம் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் பணியாற்றுதல், இதற்கான நடவடிக்கைகளை உரிய அலுவலர்கள் மேற்கொள்ளுதல், தூய்மைப் பணியாளர்களுக்கான ஊதியத்தினை முறையாகக் கணக்கிட்டு சரியாக வழங்குவதை உறுதி செய்தல் உள்ளிட்ட தூய்மைப் பணியாளர் நலன் தொடர்பாக தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தின் மாண்புமிகு உறுப்பினர் அறிவுறுத்தல் வழங்கிப் பேசினார். மேலும், இக்கூட்டத்தில் அனைத்து தொழில் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தின் போது, பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், இயந்திரமயமாக்கப்பட்ட தூய்மைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், போதுமான தனி நபர் பாதுகாப்பு உபகரணங்கள் (PPE) மற்றும் வாயு கண்டறியும் கருவிகள் (Gas Detectors) வழங்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர் அறிவுறுத்தினார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.